சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

## Case No.OS. 50/2021

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03ம் நாள் திங்கட்கிழமை

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய **பி.வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரன் | தொழில் | இராணுவம் ஓய்வு |
| தந்தை பெயர் | பெருமாள் | ஜாதி | |
| கிராமம் | வண்ணாங்குளம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**<u>03.02.2025 முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக ஏற்கனவே வா.சா.1 குறுக்கு விசாரணையின் போது பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது 26.06.1991 தேதியிட்ட ஆவணங்களின் 516/1991 அடமான கடன் பத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.06.1991 தேதியிட்ட ஆவணங்களின் 517/1991 அடமான கடன் பத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.09.2024 தேதியிட்ட வில்லங்கச்சான்று பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.06.2010 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.07.2010 தேதியிட்ட பதில் அறிவிப்பு **பி.வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.02.2007 தேதியிட்ட ரூ.1,00,000/-ற்கான பைசல் ஆன கடனுறுதி சீட்டு அசல் **பி.வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.06.2008 தேதியிட்ட ரூ.50,000/-ற்கான பைசல் ஆன கடனுறுதி சீட்டு அசல் **பி.வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.06.2005 தேதியிட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி பதிவு செய்து கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.